**காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்திட்டம் - 2023**

---

காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்திட்டத்தின் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் இடையில் கைசாத்திடப்பட்ட 2019 ஏப்ரல் 11 ஆம் திகதிய 6346-எல்கே ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் III (ii) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், விவசாய அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் சர்வதேச அபிவிருத்திச் சங்கம் அமுலாக்கல் முகவராகவுள்ளது. தெரிவு செய்யப்பட்ட வறண்ட பிரதேசங்களில் சிறுநிலவுடமையாளர் விவசாயத்தின் உற்பத்தித்திறன் மற்றும் காலநிலை மீட்சியை முன்னேற்றுவதே செயற்திட்டத்தின் நோக்கங்களாகும். செயற்திட்டத்தின் செயற்பாடுகளானது விவசாய உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல், விவசாயத்திற்கான நீர் மற்றும் செயற்திட்ட முகாமைத்துவம் ஆகிய பெயர்களிலான மூன்று கூறுகளின் கீழ் அமுல்ப்படுத்தப்படுகின்றது. கடன் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 26,829 மில்லியனிற்குச் சமனான ஐ.அ.டொலர் 100 மில்லியனாக இருந்ததுடன், அதில் ரூபா 22,804.65 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 85 மில்லியன் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தினால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. ரூபா 4,024.35 மில்லியன் மிகுதித் தொகை இலங்கை அரசாங்கம் மற்றும் பயனாளிகளினால் நிதியளிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுதின்றது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2019 மே 07 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2024 யூன் 30 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் 2.1 ஆம் பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தை தவிர்த்து 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினக் கூற்றையும் அதனது காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

2. நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வு அவதானிப்புகள்

2.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| இல | கணக்கீட்டு குறைபாடு/ கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதிலளிப்பு | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | தென் மாகாணத்தில் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் மற்றும் செயற்திட்டத்திற்கு ஏற்பட்ட கிரயம் ஆகிய இரு கூறுகளையும் தவறாக சேர்த்ததன் மூலம் சிறப்பான பயிர்ச்செய்கையுடன் தொடர்புடைய மொத்த பயனாளி பங்களிப்பு ரூபா 23 மில்லியனால் உயர்வாக காட்டப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. | அவதானிப்புடன் உடன்படுகிறோம். கணிப்பீடு செய்யும் போது இந்த தவறு ஏற்பட்டுள்ளது. 2024 ஆம் ஆண்டின் கணக்குகளில் திருத்தம் செய்யப்படும். | பயனாளி பங்களிப்பு சரியாக கணிப்பீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | கிழக்கு மாகாணத்தில் விதைகளை கொள்வனவு செய்வது தொடர்பான பயனாளர் பங்களிப்பினை கணிப்பீடு செய்யும் போது 2023 யூலை முதல் திசெம்பர் வரை பயனாளர் பங்களிப்பின் பெறுமதியினை, பயனாளர் பங்களிப்பின் மொத்தப் பெறுமதிக்காக எடுத்துக்கொள்ளப்படவில்லை. அதன் விளைவாக, கிழக்கு மாகாணத்தில் மொத்த பயனாளர் பங்களிப்பு ரூபா 03 மில்லியனால் குறைத்து காட்டப்பட்டிருந்தது. | அவதானிப்புடன் உடன்படுகிறோம். 2024 ஆண்டிற்கான கணக்குகளை தயாரிக்கும் போது இது திருத்தப்படும். | பயனாளி பங்களிப்பு சரியாக கணிப்பீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | இ.க.நி 38 இன் பிரகாரம் உருவச் சொத்தில் இருந்து அருவச் சொத்தினை வேறாக வகைப்படுத்தப்பட வேண்டுமாயினும் கணக்கீட்டு மென்பொருள் மற்றும் முகாமைத்துவ தகவல் முறைமை தொடர்பில் ஏற்பட்ட கிரயம் முறையே ரூபா 3.92 மில்லியன் மற்றும் ரூபா 10.98 மில்லியன் என்பன செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் உருவச் சொத்துக்கள் என வகைப்படுத்தப்பட்டிருந்தன. | அவதானிப்புடன் உடன்படுகிறோம். உங்களுடைய அவதானிப்பின் பிரகாரம் 2024 ஆம் ஆண்டிற்கான கணக்குகளை முன்வைக்கும் போது இதனை வேறாக காட்டுவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும். | இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் அருவச் சொத்துக்கள் பதிவு செய்யப்பட வேண்டும். |

2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

| இல | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | கணக்கீட்டு குறைபாடு/ கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதிலளிப்பு | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் - நி.பி 103 மற்றும் நி.பி 104(4) | மடிக் கணினிகள் தொலைந்தமை தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | ஆரம்பத்தில் நியமிக்கப்பட்ட ஆரம்ப விசாரணை குழுவின் செயல்திறனின்மை காரணமாக நி.பி 103(1) இன் கீழ் விசாரணை தாமதிக்கப்பட்டது. | தொடர்புபட்ட அலுவலகர்களிடம் இருந்து நட்ட நிலுவையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்து கடைப்பிடிக்க வேண்டும். |
| (ஆ) | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் | செயற்திட்ட வழிகாட்டல் குழுக் கூட்டம் (PSC) இரு மாதங்களுக்கு ஒரு முறை | 2019/01 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்திட்ட | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்திட்ட வழிகாட்டல் குழுக் கூட்டம் (PSC) |

| | | | | |
|---|---|---|---|---|
| | வெளியிடப்பட்ட 2019 மார்ச் 15 ஆம் திகதிய 01/2019 ஆம் இலக்க சுற்றறிக்கை | நடாத்தப்பட வேண்டுமாயினும் மீளாய்வாண்டின் போது மூன்று செயற்திட்ட வழிகாட்டல் குழுக் கூட்டங்கள் மாத்திரமே இடம்பெற்றிருந்தன. | வழிகாட்டல் குழுக் கூட்டத்தினை அழைக்கும் அதிகாரத்தினையும், பொறுப்பினையும் விவசாய அமைச்சு கொண்டுள்ளது. அதன்படி, அமைச்சினால் 2023 ஆம் ஆண்டில் 03 முறை கூட்டம் அழைக்கப்பட்டது. | இரு மாதங்களுக்கு ஒரு முறை இடம்பெற வேண்டும். |
| (இ) | முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட 2022 பெப்ரவரி 07 ஆம் திகதிய 01/2022 ஆம் இலக்க சுற்றறிக்கை | செயற்திட்ட உள்ளக கணக்காய்வு குழுக் கூட்டம் முதலாம் மற்றும் மூன்றாம் காலாண்டுகளில் நடத்தப்பட வேண்டுமாயினும் மீளாய்வாண்டின் போது எவ்வித கூட்டமும் நடத்தப்படவில்லை. | முகாமைத்துவம் பதில் வழங்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் உள்ளக கணக்காய்வு குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டும். |

## 3. பௌதீக செயல்திறன்

### 3.1 ஒப்பந்த நிர்வாகம்

| இல | கணக்கீட்டு குறைபாடு/ கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதிலளிப்பு | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | வடமத்திய மாகாண விவசாய அமைச்சின் பாதீட்டு தலைப்பு-620 இற்கான செயற்திட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட ஒதுக்கீட்டில் இருந்து களனிக்க வெவ மற்றும் மீ கும்புக் வெவ கதிரடித்தல் தரைகளை (threshing floor) நிர்மாணிப்பதற்காக ஒரு தனியார் கட்டுமான கம்பனியுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டது. களனிக்க வெவ கதிரடித்தல் நிர்மாணத்திற்கான ஒப்பந்தப் பெறுமதி ரூபா 4.5 மில்லியன் ஆக இருந்ததுடன் ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்ட முற்பண பெறுமதி ரூபா 1,363,288 ஆக இருந்தது. 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு களனிக்க வெவ கதிரடித்தல் தளத்தின் நிர்மாணம் ஆரம்பிக்கப்படவில்லை.<br><br>மீ கும்புக் வெவவின் கதிரடித்தல் தளத்தினை நிர்மாணத்திற்கான ஒப்பந்தப் பெறுமதி ரூபா 4,685,627 மில்லியன் ஆக இருந்ததுடன் ஒப்பந்தப் பெறுமதியில் 30 சதவீதமான ரூபா 1,405,688 தொகை ஒப்பந்தக்காரருக்கு முற்பணமாக செலுத்தப்பட்டிருந்தது. முற்பண முறியின் செல்லுபடியாகும் காலப்பகுதி 2022 மே 16 இல் கடந்துள்ளது. 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீ கும்புக் வெவ கதிரடித்தல் தளத்தின் நிர்மாணம் ஆரம்பிக்கப்படவில்லை. | உலர்த்தும் தரைகளை ஸ்தாபிப்பதற்காக விவசாய அபிவிருத்தி திணைக்களத்தின் மூலம் அமுல்படுத்தப்பட்ட செயற்திட்டத்தன் கீழ் 2021 ஆம் ஆண்டில் களனிக்க வெவ மற்றும் மீ கும்புக் வெவ ஆகிய இடங்களில் 02 உலர்த்தும் தளங்களை நிர்மாணிப்பதற்கான ஒரு ஒப்பந்தமொன்றை கட்டுமான கம்பனி கைச்சாத்திட்டது. அதன்படி, 2021 திசெம்பர் மாதத்தில் களனிக்க வெவவிற்காக ரூபா 1,363,287 தொகையும் மீ கும்புக் வெவவிற்காக ரூபா 1,405,688 தொகையும் திரட்டிய முற்பணமாக உலர்த்தும் தரை நிர்மாணத்தினை ஆரம்பிப்பதற்கு செலுத்தப்பட்டது.<br><br>2023.06.12 ஆம் திகதிய காசோலை இலக்கம் 530457 ஊடாக ரூபா 500,000 தொகை மீண்டும் செலுத்தப்பட்டதுன் 2024.03.22 ஆம் திகதிய 570209 ஆம் இலக்க காசோலை மூலம் ரூபா 500,000 தொகை மீண்டும் செலுத்தப்பட்டது. | செயற்திட்டத்தின் பணிகளை முறையாக முகாமைத்துவம் செய்து நிதிகளை தகுந்த முறையில் பயன்படுத்த வேண்டும்.<br><br>வினைத்திறனற்ற அலுவலர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். நட்டங்களை அறவீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | வடமத்திய மாகாண விவசாய அமைச்சின் பாதீட்டு தலைப்பு-620 இற்கான செயற்திட்டத்தின் மூலம் ரூபா 6,530,461 மதிக்கத்தக்க அம்பகஸ் வேவ கதிரடிக்கும் தரையின் நிர்மாணத்திற்காக 2022 ஆகஸ்ட் 02 இல் தனியார் கம்பனியுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டது. ஒப்பந்தத்திற்குள் நுழைவதற்கு முன்னால் பெறுகை நிறுவனத்தினால் கதிரடிக்கும் தரையின் நிர்மாணத்திற்கு பொருத்தமான காணியினை தெரிவு செய்யப்பட்டு கையகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. முற்பண முறி தொடர்பில் ஒப்பந்த விலையின் 20 சதவீதமான ரூபா 1,306,093 தொகை ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்டிருந்ததுடன் 2023 ஒக்தோபர் 30 இல் முற்பண முறியின் செல்லுபடியாகும் காலம் காலாவதியாகியிருந்தது. முற்பண முறியினை எடுத்துக் கொள்ளாமல் 2023 திசெம்பர் 28 வரை திகதி நீடிக்கப்பட்டிருந்தது. | அவதானிப்புடன் உடன்படுகிறோம். | நிர்மாண பணியினை ஆரம்பிப்பதற்கு முன்னர் முறையாக திட்டமிடப்பட வேண்டும். செயற்திட்டத்தின் நிதிகளை சிக்கனமாக பயன்படுத்தப்பட வேண்டும். |
| (இ) | வடமத்திய மாகாண விவசாய அமைச்சின் பாதீட்டு தலைப்பு-620 இற்கான செயற்திட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட ஏற்பாடுகளில் இருந்து ரூபா 5,515,810 தெகையுடைய பொறியியல் மதிப்பீட்டினை விஞ்சி ரூபா 6,530,461 மதிப்பிடப்பட்ட திவுல் வேவ கதிரடிக்கும் தரையினை நிர்மாணத்திற்காக தனியார் கம்பனியுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தது. ஒப்பந்தத்தினை வழங்கும் போது அதிகுறைந்த விலைமனுதாரரினை கருத்திற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. உடன்படிக்கையின் பிரகாரம் இந்த செயற்திட்டத்தினை நிறைவு செய்வதற்காக 120 நாட்களைக் கொண்ட காலப்பகுதி வழங்கப்பட்டிருந்த போதிலும் நான்கு சந்தர்ப்பங்களில் அனுராதபுர விவசாய அபிவிருத்தி திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் மொத்தமாக 390 நாட்களை நீடித்து வழங்கியிருந்தார். 2023 ஒக்தோபர் மாதமளவில் பணிகள் முறையாக கையளிக்கப்பட்டிருக்கவில்லை. திவுல் வேவ கதிரடிக்கும் தரை நிர்மாணத்தின் பௌதீக பரிசோதனையின் போது பீ.ஓ.கியூ உருப்படி இல. 06,07,09 இன் கீழ் சுட்டிக்காட்டப்பட்டதன் படி நிர்மாணம் தரமற்றதாக இருந்தமை கண்டறியப்பட்டது. | திவுல் வேவ உலர்த்தும் தரையினை நிர்மாணிப்பதற்காக ரூபா 6,395,461 தொகையான ஒப்பந்தப் பெறுமதியில் சீரா க்ளோபல் (Sierra Global) உடன் ஒப்பந்தமொன்றை கைச்சாத்திட்டது. 2022.11.05 இல் திரட்டிய முற்பணமாக ரூபா 1,267,792 தொகை பெறப்பட்டதுடன் 2023.12.31 அளவில் பட்டியலுக்கான கொடுப்பனவாக ரூபா 2,349,671 செலுத்தப்பட்டது. பௌதீக செயன்முன்னேற்றம் அண்ணளவாக 95 சதவீதம் என்று அறிக்கையிடப்பட்டிருந்தது. | நிர்ணயிக்கப்பட்ட காலப் பகுதிக்குள் நிர்மாணங்கள் நிறைவு செய்யப்பட வேண்டும். பூர்த்தியாதாத பணி அல்லது பகுதிகள் திருத்தப்பட வேண்டும், அல்லது சேதங்கள் மீட்கப்பட வேண்டும். |
| (ஈ) | வடமத்திய மாகாணத்தில் உள்ள விவசாய அமைச்சின் பாதீட்டு தலைப்பு இல.620 இற்கான செயற்திட்டத்தின் மூலம் பெறப்பட்ட ஒதுக்கீட்டில் இருந்து மீகஸ்திகிலிய வேவ மற்றும் ஒலுபதுர வேவ ஆகியவைகளின் | மீகஸ்திகிலிய மற்றும் ஒலுபதுர தொட்டி வரப்பின் சில பகுதிகள் கரையான் பிடியின் கீழ் காணப்பட்டன. பூச்சிக்கொல்லிகளை பயன்படுத்தி நிலைமையினை | குளத்தின் வரப்பில் கரையான்களை அகற்றுவதற்கு நீர்ப்பாசன திணைக்களத்தின் |

| | | | |
|---|---|---|---|
| | புனரமைப்பின் போது வேலைத் தளத்தில் அலுவலகம் ஒன்றை ஸ்தாபித்தல், காவலாளியை நியமித்தல் மற்றும் எல்லைக் கற்களை நிறுவுதல் என்பன நிறைவு செய்யப்படவில்லை. மீகஸ்திலிய வேவ வரப்பில் 15 இடங்களிலும், ஒலுபதுர வேவ வரப்பில் 11 இடங்களிலும் கரையான கூடுகளை அகற்றுவதற்கு பதிலாக பூச்சிக்கொல்லிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. பூச்சிக்கொல்லி திரவம் பயன்படுத்திய பின்னரும் கரையான் கூடுகள் உருவாகியுள்ளன. அதன்படி, மீகஸ்திகிலிய வேவ மற்றும் ஒலுபதுர வேவ குளங்களின் புனரமைப்பு வெற்றியளிக்கவில்லை. | கட்டுப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. கணக்காய்வு அவதானிப்பில் சுட்டிக்காட்டப்பட்டதன் படி ஏனைய பகுதிகளுக்கு கரையான்கள் பரவுவதை தடுப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும், இந்த செயற்திட்டத்திற்கான பணிகள் உடன்பட்ட படி நிறைவு செய்யப்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகிறது. | வழிகாட்டுதல்கள் அமுல்படுத்தப்பட வேண்டும். நீர்ப்பாசன முறைமையில் பூச்சிக்கொல்லிகளை சேர்க்கக் கூடாது. |
| (உ) | செயற்திட்டத்தின் ஊடாக ரூபா 613 மில்லியன் மதிப்பீட்டில் புத்தளம் மாவட்டத்தில் 05 விழுதொடர் குளத்தொகுதி முறைமையின் (Cascade systems) கீழ் 80 குளங்களை அபிவிருத்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டது. 30 குளங்களை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 475 மில்லியன் மதிப்பீட்டின் கீழ் ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டதுடன் 50 குளங்களின் அபிவிருத்தி கைவிடப்பட்டது. புத்தளம் மாவட்டத்தின் விவசாய மாவட்ட அலுவலகத்தின் மேற்பார்வையின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட வலஸ்வேவ, தெவெல கந்த வேவ, சலிய வேவ, பன்ஸல வேவ, ஜயன்தி வேவ மற்றும் தம்மன்னாவ வேவ ஆகிய குளங்களின் ஒப்பந்தக் காலம் காலாவதியான போதிலும் புனரமைப்புப் பணிகள் நிறைவு செய்யப்படவில்லை. | புத்தளம் மாவட்டத்தில் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய குளங்களின் எண்ணிக்கை 30 குளங்களாக குறைக்கப்பட வேண்டியிருந்ததுடன், செயற்திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட டொலர் தொகைகள் குறைவடைந்தமை காரணமாக 02 சந்தர்ப்பங்களில் எஞ்சிய குளங்களின் அபிவிருத்திளை கைவிட வேண்டியிருந்தது. புத்தளம் விவசாய அபிவிருத்தி திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழ் அபிவிருத்தி செய்யப்பட்ட 06 குளங்கள் அதன் வேலை நிறைவடைந்த பின்னர் விவசாய அபிவிருத்தி திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டன. | 05 விழுதொடர் குளத்தொகுதி கீழான குளங்கள் திட்டமிட்டபடி உரிய நேரத்தில் நிறைவு செய்யப்பட வேண்டும். |
| (ஊ) | காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்திட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் வட மேல் மாகாண நீர்ப்பாசன திணைக்களத்தின் மூலம் புத்தளம் மாவட்டத்தில் ரூபா 63 மில்லியன் மதிப்பீட்டில் 07 குளங்களை அபிவிருத்தி செய்வதற்காக ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டன. அந்த உடன்படிக்கைகளின் செல்லுபடியாகும் காலம் கடந்துள்ள போதிலும் 2023 திசெம்பர் 31 அளவில் 07 குளங்களின் அபிவிருத்தி பணிகள் நிறைவு செய்யப்படவில்லை. | வட மேல் மாகாண நீர்ப்பாசன திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழ் புனரமைக்கப்பட்ட 07 குளங்கள் அதன் பணிகள் நிறைவடைந்த பின்னர் குறித்த நிறுவனத்திற்கு முறையாக கையளிக்கப்பட்டது. | ஒப்பந்தக் காலப்பகுதிக்குள் குளம் அபிவிருத்தி பணிகள் நிறைவு செய்யப்பட வேண்டும். |
| (எ) | காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்திட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் வட மேல் மாகாண பொறியியல் திணைக்களத்தினால் (புத்தளம்) 12 குளங்களை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 222 மில்லியன் மதிக்கத்தக்க 04 ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருந்தன. ஒப்பந்தக் காலத்தினை விஞ்சிய போதிலும் 07 குளங்களின் அபிவிருத்தி பணிகள் 2023 திசெம்பர் 31 | வட மேல் மாகாண பொறியியல் திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழ் 12 குளங்களை அபிவிருத்தி செய்வதற்கு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன. 03 குளங்களை தவிர ஏனைய 09 குளங்களும் உரிய நிறுவனத்திடம் முறையாக கையளிக்கப்பட்டன. ஏனைய 03 குளங்களின் பௌதீக | செயற்திட்ட நிதியினுள் செய்யப்பட வேண்டிய அபிவிருத்தி பணிகள் நிர்ணயிக்கப்பட்ட காலத்தினுள் மேற்கொள்ளப்பட |

| | | | |
|---|---|---|---|
| | அளவிலும் நிறைவுசெய்யப்படவில்லை. | செயன்முன்னேற்றம் 95 சதவீதத்திற்கு மேல் உள்ளது. | வேண்டும். தாமதத்திற்கான காரணங்கள் விசாரணை செய்யப்பட்டு தாமத கட்டணம் விதிக்கப்பட வேண்டும். |

### 3.2 விளைவற்ற/ பயன்படுத்தப்படாத/ குறைபயன்பாடுடைய வளங்கள்

| இல | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதிலளிப்பு | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | நெற்பயிர் செய்கைக்கு மிகவும் பொருத்தமான தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தும் நோக்கில் நாடளாவிய ரீதியில் 10 மாவட்டங்களில் உள்ள 47 விவசாய சேவை நிலையங்களுக்கு 189 இயந்திரவியல் நடும் இயந்திரங்கள், 189 இயந்திரவியல் களை நீக்கும் இயந்திரங்கள் மற்றும் 95 விதை நடும் இயந்திரங்கள் வழங்கப்பட்டு அதற்காக ரூபா 215.43 மில்லியன் செலவளிக்கப்பட்டன. அதில், ரூபா 21 மில்லியன் கிரயமுடைய 35 நடும் இயந்திரங்களும், 32 களை நீக்கும் இயந்திரங்களும் மற்றும் 15 விதை நடும் இயந்திரங்களும் என மொத்தமாக 82 இயந்திரங்கள் குருநாகல் மாவட்டத்தில் உள்ள 08 விவசாய சேவை நிலையங்களின் (ரஜங்கனய இடது வரப்பு, தம்புத்த, கல்கமுவ, மஹனன்பெரிய, ரம்ப, அஹெடுவேவ, அம்பஸ்பொல, மொரகொல்லாகம) தேவை மற்றும் கோரிக்கையில்லாமல் வழங்கப்பட்டன. அந்த இயந்திரங்களை வழங்கிய பின்னர் ஏற்பட்ட 03 பயிர் பருவங்களின் பிறகு, 2023 திசெம்பர் அளவில் சகல மூன்று பருவங்களிலும் 118 விவசாயிகள் மாத்திரமே 182.73 ஏக்கரில் அறுவடை செய்துள்ளனர். அறுவடைக்கு பொருத்தமாக விவசாய இயந்திரங்கள் இருக்காமையினால் வழங்கப்பட்ட 35 நடல் இயந்திரங்களில் 14 இயந்திரங்கள் ஒரு முறையேனும் பயன்படுத்தப்படவில்லை.<br>வழங்கப்பட்ட 32 களை நீக்கும் இயந்திரங்களில் 13 இயந்திரங்கள் | 47 விவசாய சேவை நிலையங்களுக்கு வழங்கப்பட்ட மொத்த ட்ரான்ஸ்ப்ளன்டர்ஸ் (Transplanter) இயந்திரங்களின் (189) எண்ணிக்கையை கருத்திற் கொள்ளும் போது, 115 இயந்திரங்களை பயன்படுத்தி 258 விவசாயிகளின் மூலம் 2023/2024 மகா பருவம் வரையான நெல் நடுதல் செயன்முன்னேற்றம் 495.6 ஏக்கர்கள் ஆகும். இது மொத்த ட்ரான்ஸ்ப்ளன்டர்ஸ் எண்ணிக்கையுடன் ஒப்பீடு செய்யும் போது 61 சதவீதமான பயன்பாடாக உள்ளது. அத்துடன், வடமேல் மாகாணத்தின் இதுவரையான ட்ரான்ஸ்ப்ளன்டர்ஸினை கருத்திற்கொள்ளும் போது, 162 விவசாயிகளின் மூலம் 27 ட்ரான்ஸ்ப்ளன்டர்ஸ் இயந்திரங்களை பயன்படுத்தி 283.8 ஏக்கர்களில் அவர்கள் பயிரிட்டுள்ளனர். எனவே, ட்ரான்ஸ்ப்ளன்டர்ஸ் மற்றும் பவர் வீடர்ஸ் (Power Weeders) என்பவற்றின் பயன்பாடு படிப்படியாக அதிகரித்து வருகின்றமையினால் நெல் வருமான அதிகரிப்பிற்கு வழிவகுக்கும் அதேவேளை ஊழியர் கிரயம் மற்றும் விவசாய இரசாயன கிரயங்களை மிச்சப்படுத்துகிறது. | பயிரிடப்படும் நெல் வகைக்கும், விவசாயிகளின் தேவைக்கும் மற்றும் விவசாய நிலத்திற்கும் ஏற்ற வகையில் இயந்திரங்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். விளைவற்ற இயந்திரங்களை பெறுவதற்கு நடவடிக்கை எடுத்த அதிகாரிகளிடமிருந்து நட்டத்தினை வசூலிப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஒரு முறையேனும் பயன்படுத்தப்படவில்லை என்பதுடன் வழங்கப்பட்ட 15 விதை நடும் இயந்திரங்களில் 14 இயந்திரங்கள் ஒரு முறையேனும் பயன்படுத்தப்படவில்லை. பயன்படுத்தப்பட்ட இயந்திரங்கள் ஒரு அல்லது இரு முறை மாத்திரமே பயன்படுத்தப்பட்டன. அதன்படி, ஏற்பட்ட கிரயங்கள் பயனற்றதாக இருந்தன. | | |
| (ஆ) | வடமத்திய மாகாண செயற்திட்ட அலுவலகம் ஊடாக வடமத்திய மாகாணத்தில் 12 விவசாய சேவை நிலையங்களிற்கு ரூபா 61 மில்லியன் மதிக்கத்தக்க விவசாயம்சார் இயந்திர உபகரணம் வழங்கப்பட்டது. 02 அறுவடை இயந்திரங்கள், 40 நடுதல் இயந்திரங்கள், 40 களை நீக்கும் இயந்திரங்கள் மற்றும் 20 விதை நடும் இயந்திரங்கள் என்றவாறு வழங்கப்பட்டன. விவசாயிகளின் தேவைகள் மற்றும் பயிரிடப்பட்ட நிலம் என்பவற்றுடன் ஒவ்வாமை காரணமாக இயந்திரங்கள் பயன்படுத்தப்படாமல் விவசாய சேவை நிலையங்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. அதன்படி, ஏற்பட்ட செலவினம் பயனற்றதாக இருந்தது. | பறங்கியவடிய விவசாய சேவைகள் நிலையத்தில் பொது தனியார் பங்குடமை மற்றும் உற்பத்தி கம்பனி என்பவையின் கீழ் முன்னோடித் திட்டம் என ஆரம்பத்தில் விவசாய இயந்திர அலகு திட்டமிடப்பட்ட போதும் அங்கீகாரம் கிடைக்காமையினால் அண்ணளவாக ஒரு வருடம் செயற்திட்டம் தாமதமானது. தற்போது, 09 விவசாய சேவைகள் நிலையங்களுக்காக உபகரண களஞ்சிய அறைகள் கட்டப்பட்டு ஒழுங்கு முறையில் உபகரணத்தினை களஞ்சியப்படுத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. அத்துடன், இந்த பருவகாலத்தில் பயன்படுத்தப்பட்ட மற்றும் பயன்படுத்தப்படாத உபகரணம் தொடர்பான அறிக்கை ஒன்றை (18 நடுதல் மற்றும் 16 களை நீக்கல்) தலைமை அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டது. பயன்படுத்தப்படாத உபாரணம் ஏனைய இடங்களுக்கு அனுப்பப்படும். 02 இணைந்த அறுவடையாளர்கள் சில திருத்தம் செய்த பிறகு அறுவடைக்காக பயன்படுத்தினர். மகா 2023/24 இன் போது, இதில் இருந்து வருமானமாக 09 இலட்சம் ஈட்டப்பட்டது. விவசாயகளுக்கு இடையில் இந்த இயந்திரத்தை பிரபல்யபடுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் திட்டமிடப்பட்டன. | விவசாயிகள் மற்றும் விவசாய நிலங்களுக்கு பொருத்தமில்லாத இயந்திரங்களை கொள்வனவு செய்வதில் ஈடுபட்ட அதிகாரிகளுக்கு எதிராக விசாரணைகள் நடத்தப்பட்டு சேதங்கள் மீட்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2022 ஆம் ஆண்டில் காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்திட்டத்தின் மூலம் புத்தளம் மாவட்டத்தின் 04 பிரதேச செயலகங்களுடன் தொடர்புடைய 58 யாயங்களை யாயங்களை உள்ளடக்கிய 223.3 கிலோமீற்றர் நீண்ட யானை வேலியை நிர்மாணிப்பதற்கு ரூபா 139 மில்லியன் மதிப்பிடப்பட்டது. 2023 திசெம்பர் 31 வரை யானை வேலியினை அமைக்காமல் வேலியினை அமைப்பதற்கு தேவையான மூலப்பொருட்கள் மற்றும் உபகரணம் என்பன கொள்வனவு செய்யப்பட்டு தப்போவ விவசாய சேவை நிலையத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது. | ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் உபகரணங்கள் படிப்படியாக வழங்கப்பட்டதுடன் 2023.07.06 இல் வழங்குனரால் இறுதி உபகரணங்கள் கையளிக்கப்பட்டன. விவசாயிகள் மற்றும் அலுவலகர்கள் பயிற்சியை நிறைவு செய்த பின்னர் 2023/24 மகா பருவத்திற்காக பருவகால பயிரிடல் வேலிகனை அமுல்படுத்துவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. பலத்த மழை காரணமாக, பெரும்பாலான நெல் வயல் பயிர்ச்செய்கைகள் 2023 திசெம்பர் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டதுடன், விவசாய நிறுவனங்களுக்கான களஞ்சிய வசதிகள் காணப்படாமை காரணமாக பருவகாலம் ஆரம்பிக்கும் வரை உபகரணங்களை விவசாய சேவைகள் நிலையத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டது. | திட்டமிட்டபடி செயற்திட்ட பணிகள் நிறைவு செய்யப்பட வேண்டும். செயற்திட்ட பணிகளில் உள்ள தாமதத்திற்கான காரணங்கள் சரிபார்த்து அதனை தவிர்ப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 3.3 சர்ச்சைத் தன்மையுடைய விடயங்கள்

| இல | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதிலளிப்பு | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | அனுராதபுர மாகாண செயற்திட்ட அலுவலகத்தினால் யாழ பருவத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட விதைகள் 25 சதவீத பயனாளிகளின் பங்களிப்பின் கீழ் விவசாய வசதியளிப்போர் ஊடாக விவசாயிகளுக்கு பங்கீடு செய்யப்பட வேண்டியிருந்த போதும் பங்கீடு செய்யப்படாமல் மாதிரிக் கணக்காய்விற்கு உட்பட்ட விவசாய வசதியளிப்போர்களின் கட்டுப்பாட்டில் ரூபா 05 மில்லியன் மதிப்புடைய 1143.5 கிலோகிறாம் விதைகள் காணப்பட்டன. | இந்த விதைகள் அந்துப்பூச்சிகள் வளரும் முன் விவசாய கிணறுகளின் கீழ் பயிரிடுவதற்காக விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டன. இது தொடர்பான விதைகளை களஞ்சியப்படுத்துவது தொடர்பில் அதிகாரிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. | பயர்செய்கைக்குரிய காலத்தினுள் விதைகளின் விநியோகம் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | 2021 ஆம் ஆண்டில் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படவிருந்த கூட்டெரு உர உற்பத்தி உபகரணத்தினை கொள்வனவு செய்வதற்காக செயற்திட்டத்தின் மூலம் ரூபா 50 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. உர உற்பத்தி உபகரணத்தினை பெற்ற பறங்கியவதிய, கொன்வேவ மற்றும் கலென்பிடுனு வேவ பகுதிகளில் உள்ள 2,847 பயனாளிகளில் ஒருவர் மாத்திரமே 2023 திசெம்பர் அளவில் உரத்தினை உற்பத்தி செய்து வந்தார். அதன்படி, உர உற்பத்தி உபகரணத்திற்கு ஏற்பட்ட | இந்த விவசாயிகளை தெரிவு செய்வதற்கு அடிப்படையாக, 2021/22 மகா பருவத்தில் பயிர்ச்செய்கை செயதல், உற்பத்தியாளர் சங்கங்களில் உறுப்பினராக இருத்தல் மற்றும் அந்த நேரத்தின் போது பிரதான கூட்டெருவினை உற்பத்தி செய்தல் போன்றவைகளாக இருந்தன. விசாயிகள் கூட்டெரு உற்பத்தியனை காலத்துக்குக் காலம் மட்டுப்படுத்துவதனால் உற்பத்தியை அதிகரிக்க | பயிர்ச்செய்கை தேவையினை அடிப்படையாகக் கொண்டு கூட்டெரு உர உற்பத்தி உபகரணம் விநியோகிக்கப்பட வேண்டும். விடுவிக்கப்பட்ட பொருட்கள் மற்றும் விதைகளை பின்பற்ற தேவையான அறிவுறுத்தல்கள் |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 50 மில்லியன் கிரயம் பயனற்றதாக இருந்தது. | விவசாயிகளுக்கு தொடர் நிகழ்ச்சித் திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன. அத்துடன், உங்களின் அறிவுறுத்தல்களின் பிரகாரம், பயன்படுத்தப்படாத சகல மூலப்பொருட்களையும் மீளப்பெற்று ஆவணங்களை தயாரித்த பிற்பாடு தேவையான முகவர்களுக்கு அவைகளை வழங்குவதற்கும் மற்றும் அத்தகைய விவசாயிகளுக்கு நன்மைகளை வழங்குவதில்லை எனவும் தீர்மானிக்கப்பட்டது. இது தொடர்பாக விழிப்புணர்வும், தகவலை சேகரிக்கும் பணியும் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | மற்றும் வழிகாட்டுதல்கள் வழங்கப்பட வேண்டும். |
| (இ) | செயற்திட்டத்தின் மூலம் வடமேல் மாகாணத்தின் 20 நீர்ப்பாசன விழுதொடர் குளத்தொகுதி முறைமைக்கு உரித்தான 146 குளங்களை புனரமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டிருந்தது. கோப்புகளின் அதிகாரமளிப்பு, அனுமதியளிப்பு மற்றும் கொடுப்பனவு தொடர்பான பெறுகை வழிகாட்டிகளின் ஏற்பாடுகளுக்கு இணங்காத வகையில் முழுமையற்ற தகவலை கொண்ட கோப்புகள் பராமரிக்கப்பட்டிருந்தன. | அவதானிப்புடன் உடன்படுகின்றேன்.<br><br>எதிர்காலத்தில் இதுபோன்ற குறைபாடுகள் ஏற்படுவதை தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும். | பணத்தினை செலவு செய்யும் போது அரசாங்கத்தினால் விதிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் சுற்றறிக்கைகளின் பிரகாரம் செயற்திட்டம் செயற்பட வேண்டும். |
| (ஈ) | காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்திட்டத்தின் வடமேல் மாகாண பிரதி செயற்திட்ட அலுவலகத்துடன் தொடர்புடைய 2022 மற்றும் 2023 ஆண்டுக்கான வவுச்சர்களின் மாதிரி பரிசோதனையின் போது நிதிப் பிரமாண இல. 138 மற்றும் 257 என்பவற்றுக்கு முரணாக வவுச்சர்களை சான்றுறுதி செய்யாமல் ரூபா 06 மில்லியன் செலுத்தப்பட்டிருந்த அதேவேளை நிதிப் பிரமாண இல. 137 இற்கு முரணாக கொடுப்பனவுகளை அங்கீகரிக்காமல் ரூபா 09 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. | அவதானிப்புடன் உடன்படுகின்றேன்.<br><br>எதிர்காலத்தில் இதுபோன்ற குறைபாடுகள் ஏற்படுவதை தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும். | விதிகள் மற்றும் பிரமாணங்களை மீறி கொடுப்பனவுகளை மேற்கொண்ட அதிகாரிகளுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.4 மனித வள முகாமைத்துவத்துடன் தொடர்புடைய விடயங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதிலளிப்பு | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|
| வடமேல் மாகாண பிரதி செயற்திட்ட அலுவலகத்திற்கு முகாமைத்துவ உதவியாளரை ஆட்சேர்ப்பு செய்வதற்கான நேர்முகப்பரீட்சையினை நடாத்த செயற்திட்டம் 09 மாதங்களுக்கு மேல் செலவிட்டிருந்ததுடன், பிரதி செயற்திட்ட பணிப்பாளரின் உறவினரான தகைமையற்ற ஒருவரை தெரிவு செய்திருந்தது. | ஐயவினாவில் குறிப்பிடப்பட்ட விடயத்தினை பரீட்சித்த பின்னர் வடமேல் மாகாண பிரதி செயற்திட்ட பணிப்பாளரையும் அவரது உறவினரான முகாமைத்துவ உதவியாளரையும் சேவையில் இருந்து நீக்கப்பட்டனர். | ஊழியர்கள் மற்றும் அதிகாரிகளினை ஆட்சேர்ப்பு செய்யும் போது தகைமைகள் சரிபார்க்கப்பட்டு நியமிக்கப்பட வேண்டும். தகைமையற்ற அலுவலர்களை இணைத்துக் கொள்ள அனுமதி வழங்கிய அதிகாரிகளுக்கு எதராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.5 முறைமை மற்றும் கட்டுப்பாடுகள்

| இல | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதிலளிப்பு | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | முகாமைத்துவ தகவல் முறைமை மற்றும் கணக்கீட்டு முறைமை என்பன செயற்திட்டத்தின் ஆரம்பத்தில் நிறுவப்பட்டு செயற்திட்டத்தின் பணிகளுக்காக பயன்படுத்தப்பட வேண்டுமாயினும், செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து 04 ஆண்டுகள் கடந்த பின்னர் 2022 செப்தெம்பர் 22 மற்றும் 2022 ஒக்தோபர் 17 இல் மென்பொருள் முறைமையின் கொள்வனவு அல்லது வடிவமைப்பு மேற்கொள்ளப்பட்டிருந்தது.<br>முகாமைத்துவ தகவல் முறைமைக்காக ரூபா 13.65 மில்லியனும் கணக்கீட்டு முறைமைக்காக ரூபா 3.92 மில்லியனும் செலவளிக்கப்பட்டிருந்தன.<br>எவ்வாறாயினும், கணக்கீட்டு முறைமையினை நிறுவுவதன் மூலம் எதிர்பார்த்த நோக்கங்கள் அடையப்பெறவில்லை. | முகாமைத்துவ தகவல் முறைமையானது நோக்கெல்லையின் தன்மை மற்றும் நியாயப்படுத்தல், அனுமதி என்பவற்றை கருத்திற் கொண்டு எஸ்டிஈபி குறிப்பு இலக்கம் LK-MOA-315134-CS-CDS மூலம் நேரடி ஒப்பந்த முறைமையின் கீழ் பெறுகையினை தொடர்வதற்கு உலக வங்கியால் அனுமதி வழங்கப்பட்டது. அதன்படி, GIS அடிப்படையிலான முகாமைத்துவ தகவல் முறைமையினை (MIS) மாற்றியமைத்தல், நிறுவுவதல், ஆணையிடல் மற்றும் பராமரித்தல் என்பவற்றுக்காக நேரடி ஒப்பந்த முறையின் கீழ் பெறுகை மேற்கொள்ளப்பட்டது. | நேரடி ஒப்பந்த அடிப்படையில் பெறுகை தொடர்பில் பொறுப்புவாய்ந்த அதிகாரிகள் மற்றும் முகாமைத்துவ தகவல் முறைமையினையும் கணக்கீட்டு முறைமையினையினை யும் நிறுவுவதில் தாமதம் ஏற்பட்டமை தொடர்பில் ஈடுபட்டவர்கள் போன்றவர்களுக்கு எதிராக விசாரணை செய்து ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவும். |